<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**</u>

<u>**CC. No. 157/2023**</u>

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 1–ம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 2 )**–ன் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு **உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னுராமன் | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **கிருஷ்ணசாமி** | **ஊர்** | | பாதிரகுடி |
| வயது | : | 71/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

<u>**01.06.2026**</u>

எதிரிகள் ஆஜர்.

**(Crl.M.P.No. 168/2025 – ன் 23.01.2025 ஆம் தேதிய உத்தரவின் பேரில், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்)**

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1) எனது வீட்டின் அருகில் தர்மராஜ், லெட்சுமி, பொண்ணுமணி, உத்திராபதி , தியாகராஜன் ஆகியோரின் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று எதிரிகள் உட்பட சுமார் 10 பேர் வந்திருப்பார்கள். 10பேர் சேர்ந்துதான் என்னையும் எனது பெரியமகனையும் தாக்கினார்கள் என்றால் தாக்க வந்தார்கள். எதற்காக வந்தார்கள் என்றால் எனது மகன் ராமகிருஷ்ணன் எதிரியின் மகளை கையை பிடித்து இழுத்ததாக பொய்யாக சொல்லி பிரச்சனை செய்யவந்தார்கள். அதற்காக ராமகிருஷ்ணன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் சிறையில் இருந்தார் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை.

2) நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி தரப்பில் எனது மகன் மீது கொடுக்கப்பட்ட புகாரை மனதில் வைத்துக்கொண்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக எனது பேத்தியை வைத்து பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பொய்புகாருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –** இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.